கந்தகத் திணை

# உரையாடல் களம்

மின் - நூல்










உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)
சிவகாசி

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
சிவகாசி – 626 124

இணைந்து உருவாக்கும்
மின்-நூல் **(E-book)**

# கந்தகத் திணை

(புதியதோர் உலகம் செய்வோம்)

**(2015 - 2016)**

# உரையாடல் களம்

**தமிழ்த்துறை மாணவர் குழாம்**

# திக்திக்கப் பேசுவோம்

குழந்தைகள் பேசுவது யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் பயனுள்ள உரையாடல் கலந்த குழந்தைகளின் பேச்சு சொர்க்கத்தைவிட இனியது எனில் மிகையில்லை.

பாலைவனக்கப்பலாம் ஒட்டகம் – பண்பாட்டு விருந்துக்குப் படையலாகும் வாழை – கண்ணீரைக் கொடுத்தாலும் சமையலறையில் உறவாகிப் போன வெங்காயம் – வண்ணத்தால் மயக்கி நம்மைப் பறக்கத் தூண்டும் பட்டாம்பூச்சி – கொடிகளில் பிறந்து தெருக்கோடிகளில் எல்லாம் விற்பனையாகும் வெள்ளரிக்காய் என விரிந்து விரிந்து ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் உரையாடல் களம் – கருத்துக்களின் உறைவிடம். உரையாடல் களம் புகுவோம் – அறிவைச் சேகரித்துச் சுவைத்து மகிழ்வோம்.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**
ஒருங்கிணைப்பாளர், **கந்தகத்திணை.**

# பொருளடக்கம்


| வ. எண் | படைப்பு | படைப்பாளர் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஒட்டகம் | பா. அழகுமீனா | 1 |
| 2. | வாழைமரம் | ம. லலிதா | 4 |
| 3. | வெங்காயம் | இரா. விஜயபிரியா | 7 |
| 4. | பட்டாம்பூச்சி | சு. சண்முகபிரியா | 10 |
| 5. | வெள்ளரிக்காய் | கு. புவனேஸ்வரி | 15 |

# ஒட்டகம்

(மாரியப்பனும் அவன் நண்பனும் தொலைக்காட்சியில் ஒட்டகம் வருவதைப் பார்க்கின்றனர்)





மாரியப்பன்: சிவா இங்கே பார் ஒட்டகம்.

சிவா: ஆமா! உனக்கு ஒன்று தெரியுமா... நம்மால் நம்முடைய உடல் வெப்பநிலையை மாற்ற முடியுமா?

மாரியப்பன்: அது எப்படி மாற்ற முடியும்? மாற்ற முடிந்தால் அதைப் பற்றிச் சொல்.

சிவா: நம்மால் வெப்ப நிலையை மாற்ற முடியாது, ஆனால் ஒட்டகம் தன்னுடைய வெப்ப நிலையை மாற்றிக் கொள்ளும்.



மாரியப்பன்: அப்படியா!

சிவா: ஒட்டகம் ஏறத்தாழ 200 கிலோ கிராம் எடையைக் கொண்டது.

மாரியப்பன்: சரி ஒட்டகத்தைப் பற்றி மேலும் கொஞ்சம் சொல்

சிவா: நன்கு வளர்ந்த ஒட்டகம் ஏழு அடி உயரம் இருக்கும்.

மாரியப்பன்: ஓ அவ்வளவு உயரம் இருக்குமா! வேறு செய்தி.



சிவா: ஒட்டகத்தின் திமில் 75 செ.மீ உயரம் இருக்கும்.

மாரியப்பன்: சிவா திமில் என்பது என்ன?

சிவா: திமில் என்பது கழுத்துப் பகுதிக்கும் முதுகுப் பகுதிக்கும் இடைப்பட்ட இடத்தில் இருக்கும்.

மாரியப்பன்: சிவா இன்னும் ஒண்ணு தெரியுமா?

சிவா: சொல்.

மாரியப்பன்: பாலூட்டும் மற்ற விலங்குக்கு இரத்த சிவப்பு அணுக்கள் முட்டை வடிவில் இருக்கும்.

சிவா: அப்போ ஒட்டகத்துக்கு எப்படி இருக்கும்?

மாரியப்பன்: ஒட்டகத்துக்கு இரத்த சிவப்பணுக்கள் வட்ட வடிவத்தில் இருக்கும்.

சிவா: ஒட்டகத்துக்குத் தண்ணீர் இருக்கும் இடத்தை அறியும் சக்தி உண்டு.

மாரியப்பன்: அது எப்படி அறிந்து கொள்ளும்?



சிவா: ஒட்டகம் தன்னுடைய மூக்கால் மோப்பமிட்டு அறிந்து கொள்ளும்.

மாரியப்பன்: ஒட்டகத்தை நாட்டைப் பாதுகாக்கும் இராணுவத்திற்கும் பயன்படுத்துகின்றனர்.

சிவா: ஒட்டகம் அங்கே என்ன வேலை செய்யும்?

மாரியப்பன்: போர்க் காலத்தில் பயணிக்கவும் பளு தூக்கவும் பயன்படும்.

சிவா: ஒட்டகப் பால் அதிக நோய் எதிர்ப்பு சக்தி உடையது.

மாரியப்பன்: அந்தப் பாலில் என்னென்ன சத்துக்கள் இருக்கும்?

சிவா: சொல்கிறேன் கேள்... வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் புரதங்கள் உள்ளன.

மாரியப்பன்: மற்ற விலங்குகளின் பாலுடன் ஒப்பிடும் போது ஒட்டகப் பாலில் கொழுப்பு குறைவு... இரும்புச் சத்தும், வைட்டமின் ஈ யும் அதிகமாக உள்ளன.



மாரியப்பன்: ஒட்டகத்தின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா?

சிவா: தெரியுமே!

மாரியப்பன்: அப்படின்னா சொல்.

சிவா: ஒட்டகம் வெப்பம் நிறைந்த பாலைவனப்பகுதியில் வாழ்ந்தாலும் அது தண்ணீர்இல்லாமல் நிறைய நாட்கள் வாழும்.

மாரியப்பன்: சரியாகச் சொன்னாய் !

சிவா: தனக்குத் தேவையான தண்ணீரை அதிகமாகக் குடித்து வயிற்றுப் பகுதியில் சேமித்து வைத்துக் கொள்ளும்.

மாரியப்பன்: அப்போ ஒட்டகம் எத்தனை மாதம் தண்ணீர் குடிக்காமல் இருக்கும்?

சிவா: தனக்குத் தேவையான புல் போன்ற உணவுப் பொருட்கள் கிடைத்தால் 10 மாதம் வரை தண்ணீர் குடிக்காமலே இருக்கும்.

மாரியப்பன்: சரி...... சரியான உணவு கிடைக்கவில்லை என்றால்...?

சிவா: கிடைக்காத பட்சத்தில் ஏறத்தாழ 100 லிட்டர் வரை நீரை அருந்திச் சேமித்து வைக்கும்.

மாரியப்பன்: அப்படியா சிவா ! உனக்குத் தெரிந்ததை என்னுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி !

**ஆக்கம்: பா. அழகுமீனா,**
**முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.**

# வாழை மரம்

(இளங்கோ பள்ளியிலிருந்து புத்தகச் சுமையுடன் வீட்டிற்கு வந்தவுடன் தன் அக்கா கயல்விழியைத் தேடுகிறான்)



இளங்கோ: அக்கா நான் உன்னைத் தான் தேடினேன்.

கயல்விழி: என்ன ! இன்றைக்கு உன் ஆசிரியர் எதைப் பற்றித் தெரிந்து வரச் சொன்னார்கள்?

இளங்கோ: வாழை மரம் பற்றிய தகவல்களைச் சேகரித்து வரச் சொன்னார்கள் அக்கா...



கயல்விழி: என்ன வாழை மரத்தைப் பற்றியா?

இளங்கோ: அக்கா.. அக்கா... இந்த வாழை எல்லா இடங்களிலும் பயிரிடப்படுமா?

கயல்விழி: இல்லை. வெப்பப் பகுதிகளில் மட்டும் தான் பயிரிடப்படும்.

இளங்கோ: ஓ ! அதனால் தான் இந்தியாவில் அதிகமாகப் பயிரிடப்படுகிறதா?

கயல்விழி: ஆமாம். இந்தியா தவிர மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கியூகினியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பயிரிடப்படுகிறது.



இளங்கோ: அப்படி என்றால் முதன்முதலாக எந்தப் பகுதியில் வாழைமரம் தோன்றியது.

கயல்விழி: அப்படிக் கேள் ! முதலாவதாகத் தென்கிழக்கு ஆசியாவில்தான் தோன்றியது. பின்பு ஒவ்வொரு இடமாகப் பரவியது.

இளங்கோ: இதை ஒவ்வொரு இடமாகக் கொண்டு சென்றது யார் அக்கா?

கயல்விழி: இந்தியாவிலிருந்து மத்தியக் கிழக்குப் பகுதிக்கு மொகலாயர்களும் ஆப்பிரிக்காவிற்கு அரேபிய வியாபாரிகளும் கொண்டு சென்றனர்.

இளங்கோ: சரி இருக்கட்டும், இந்த வாழை மரத்தைப் பயிரிட விதைகள் உள்ளனவா?

கயல்விழி: விதைகள் உள்ள வாழை இன்று இல்லை, அதனால் மரபின வாழைகளின் கிழங்குகளை நட்டே பயிரிடல் நடைபெறுகிறது.



இளங்கோ: அப்படியானால் வாழைக்கு மற்ற மரங்களைப் போன்று வேர் இருக்காதா?, கிழங்கு தான் இருக்குமா?

கயல்விழி: வாழை ஓர் வித்திலைச் செடி. அதனால் மற்றத் தாவரங்களைப் போல நீளமான வேர் இருக்காது. கிழங்கு தான் இருக்கும்.

இளங்கோ: வேரில்லாத கிழங்காலான மரம் பலத்த காற்றடித்தால் சாய்ந்து விடும் அல்லவா.

கயல்விழி: ஆமாம். சரியாகச் சொன்னாய்.



இளங்கோ: வாழை மரத்தின் பூக்கள் மற்ற பூக்களைப் போல் இல்லாமல் வித்தியாசமாகக் காணப்படுகிறதே அக்கா.

கயல்விழி: ஒரு வாழை மரத்தில் ஆண், பெண் பூங்கொத்துக்கள் இருக்கும்.





இளங்கோ: என்ன ஒரே பூங்கொத்துகளில் ஆண் பெண் பூக்களா?

கயல்விழி: ஆமாம். தண்டின் அடியில் உள்ள பூக்கள் ஆண் பூக்களாகும். நுனியில் உள்ள பூக்கள் பெண் பூக்களாகும். இந்தப் பூக்கள் காயானவுடன் வாழைத்தார் ஆகின்றது.

இளங்கோ: வாழைப்பழம் என்னென்ன நிறங்களில் காணப்படுகிறது?

கயல்விழி: பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் உள்ளன. சில இடங்களில் பச்சை நிறப் பழங்களை வியாபார நோக்கத்திற்காக வேதியியல் மாற்றம் செய்து மஞ்சள் நிறமாக மாற்றுகின்றனர். ஆகையால் பழங்களின் தரமறிந்து நாம் அவற்றை உண்ண வேண்டும்.

இளங்கோ: சரி அக்கா. நீயும் எனக்குப் போதுமான செய்தியைக் கூறி விட்டாய். எனக்குப் பசிக்கிறது. வா உணவருந்தச் செல்லலாம்.

**ஆக்கம்: ம. லலிதா,**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்)**

# வெங்காயம்



மாணவர்கள்: காலை வணக்கம் ஐயா.


ஆசிரியர்: காலை வணக்கம், அமருங்கள். அமுதன் இன்றைக்கு எத்தனை பேர் விடுப்பு எடுத்துள்ளனர்?

அமுதன்: மூன்று பேர்.

ஆசிரியர்: சரி, உட்கார்... இன்றைக்கு நாம புதுசா ஒரு பாடம் படிக்கப் போகின்றோம்.

கமலி: என்ன பாடம் ஐயா?

ஆசிரியர்: மனிதனுடைய வாழ்க்கைக்கு அரும் மருந்தாக விளங்கும் வெங்காயத்தின் குணநலன்களைப் பற்றித் தான் படிக்கப் போகின்றோம்.
(உடனே மாணவர்களிடையே சிரிப்பும் சலசலப்பும் ஏற்பட்டது)



ஆசிரியர்: என்ன? ஒரே ஆரவாரமா இருக்கு. சாதாரண வெங்காயத்தைப் பற்றி என்ன சொல்லமுடியும்னு நினைக்கிறீங்களா? எங்க, வெங்காயத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்க பார்ப்போம்.

அமுதன்: வெங்காயத்துல புரதம், தாது, வைட்டமின் எல்லாம் இருக்குனு எங்கப்பா சொல்லுவார்.

ஆசிரியர்: சரி. வேற உங்களுக்கு என்ன தெரியும்?

ஆதவன்: அலைல் புரோப்பைல் டை சல்பைடு என்ற வேதிப்பொருள் தான் வெங்காயத்தின் காரத் தன்மைக்குக் காரணமாம். அதுனால தான் வெங்காயம் உரிக்கும் போது கண்ணீர் வடியுதுன்னு ஒரு புத்தகத்தில படிச்சிருக்கேன்.



ஆசிரியர்: நன்று. இவ்வளவு கருத்துக்களைத் தெரிஞ்சு வச்சிருக்கீங்களே… இன்னும் வெங்காயம் குறித்த சில தகவல்களை நான் சொல்றேன் கேளுங்க.

அமுதன்: இது தவிர வேறு என்ன இருக்கப் போகிறது?

ஆசிரியர்: வெங்காயம் தினமும் சாப்பிட்டு வந்தால் மனிதன் நீண்ட நாள் உயிர் வாழலாம்.

ஆதவன்: ஐயா எனக்கு ஒரு சந்தேகம்.

ஆசிரியர்: சந்தேகமா? என்ன கேளு?

ஆதவன்: வெங்காயத்தை வேக வைத்துச் சாப்பிடணுமா? இல்ல, அப்படியே சாப்பிடணுமா?

ஆசிரியர்: வேக வைக்காம சாப்பிடறது தான் ரொம்ப நல்லது. அது இரத்தத்தில் கொழுப்புச் சேர்வதைத் தடுக்கிறது. எனவே தான் வெங்காயத்தை இதயத் தோழன்னு சொல்றாங்க.

ஆதவன்: சரிங்க ஐயா.



ஆசிரியர்: சிறுநீரகத் தொற்று, மூட்டு வலி, இருமல், மூக்கு எரிச்சல் போன்ற பல நோய்களுக்க வெங்காயம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. அது மட்டுமில்லை. புற்றுநோயைத் தடுப்பதற்கான மருந்து வெங்காயத்தில் இருப்பதாக சமீபத்துல ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிச்சிருக்காங்க.




ரேவதி: ஓ! புற்றுநோயைத் தடுக்குறதுக்குமா வெங்காயம் பயன்படுது.

கமலி: என் பல்வலியையும் குணப்படுத்துமா ?

ஆசிரியர்: ம்... ஏன் இல்ல. வெங்காயச் சாறை தினமும் வெந்நீரில் கலந்து வாயைக் கொப்பளித்து வந்தால் பல்வலி குணமாகும், தினமும் மூன்று வேளையும் அரைத் தேக்கரண்டி வெங்காயச் சாற்றைக் குடித்து வந்தால் நுரையீரல் சுத்தமாகும். நன்றி மாணவர்களே. நாளை பார்க்கலாம்.



தேவி: இன்றைக்கு ஆசிரியர் நடத்தின வகுப்பு பயனுள்ளதாக இருந்தது.

இளவரசி: ஆமாம் ஆமாம்... வெங்காயம் சாப்பிட்டால் வாய் நாற்றமடிக்கும். அதனால யாரும் பக்கத்துல நின்று பேச மாட்டார்கள் என்று இவ்வளவு நாளாக நினைத்தேன் ஆனால், வெங்காயத்தில் எவ்வளவு நல்ல குணங்கள் இருக்குன்னு இன்று தான் தெரிந்து கொண்டேன்.

ரேவதி: ஆமாம் இளவரசி. நம்ம தமிழர்களுடைய உணவுல எவ்வளவு நல்ல செய்திகள் இருக்குதுன்னு பாரேன்.

இளவரசி: சரியா சொன்ன ரேவதி.. அதனால தான் நம் முன்னோர்கள் உணவே மருந்துன்னு சொல்லியிருக்காங்க. சரி ரேவதி. வா போகலாம் வீட்டுக்கு....

**ஆக்கம்: ரா. விஜயபிரியா,**
**முனைவர் பட்ட ஆய்வாளர் – தமிழ்.**

# பட்டாம்பூச்சி

(இடம் : பூங்கா)



மகிழன்: இனியன் விளையாடுவோமா?

இனியன்: ம், தொட்டுப் பிடிச்சு விளையாடுவோம்.

மகிழன்: ஏய் இனியன் என்னைத் தொட வாடா.



இனியன்: உன்னப் பிடிக்காம விடமாட்டேன்டா.

மகிழன்: உன்னால என்னைப் பிடிக்க முடியாது நான் பட்டாம்பூச்சி மாதிரி பறந்து வந்து உன்னைத தொட்டுருவேன்.

இனியன்: ஏய், நானும் பருந்து மாதிரி பறந்து வந்து உன்னைத் தொட்டுருவேன்.



மகிழன்: உனக்குப் பட்டாம்பூச்சியைப் பற்றித் தெரியுமா?

இனியன்: தெரியாது, ஏய் உனக்குத் தெரியுமா?

மகிழன்: தெரியுமே.

இனியன்: அப்போ எனக்கு அதைப் பற்றிச் சொல்வாயா?



மகிழன்: ம், சொல்றேன்.

இனியன்: சரி, பட்டாம்பூச்சிக்கு என்ன என்ன பெயர் இருக்குன்னு சொல் பார்ப்போம்.

மகிழன்: ம். சொல்றேன் கேளு. வண்ணத்துப் பூச்சி, பட்டாம்பூச்சி, வண்ணாத்திப் பூச்சின்னு இதனைக் கூப்பிடுவாங்க.


இனியன்: வண்ணத்துப் பூச்சின்னு ஏன் பெயர் வந்தது?

மகிழன்: அதனோட இறக்கையில் கண்ணைக் கவரும் வண்ணங்கள் பல இருந்ததால் அதற்கு வண்ணத்துப்பூச்சின்னு பெயர் வந்தது.

இனியன்: வண்ணத்துப் பூச்சி என்ன சாப்பிடும்?

மகிழன்: பூக்களில் உள்ள தேனை உணவாக உட்கொள்ளும்.

இனியன்: சரி, அதனோட அறிவியல் பெயர் சொல் பார்ப்போம்.



மகிழன்: அதனோட அறிவியல் பெயர் லெப்பிடோப்டரா.

இனியன்: எத்தனை வகையான பட்டாம்பூச்சி இருக்குது?

மகிழன்: 15,000 முதல் 20,000 வகையான பட்டாம்பூச்சி இருக்குது. மதுரைப் பகுதியில் மட்டுமே 70 வகைப் பட்டாம்பூச்சி இனங்கள் இருக்குது.

இனியன்: அங்கு உள்ள பட்டாம்பூச்சி பெயரோடு ஏதாச்சும் இரண்டு மட்டும் சொல்லேன்.

மகிழன்: ம், பருபலா, வெள்ளையன், வெண்புள்ளி, மயில் அழகி, நீல வசீகரன். அப்புறம் உன் நிறத்துல கருப்பன் என்ற வண்ணத்துப் பூச்சியும் இருக்குது.



இனியன்: பட்டாம் பூச்சி இனத்துலயே எது பெரிய பட்டாம்பூச்சி?

மகிழன்: பப்புவா நீயுகினி நாட்டில் காணப்படும் குயின் அலெக்ஸாண்டிரா தான் பெரிய பட்டாம்பூச்சி.

இனியன்: சரி அது எவ்வளவு பெருசுனு சொல்...

மகிழன்: அது தன் இறக்கையை விரிக்கும் போது. 28 செ.மீ. நீளம் இருக்குமாம்.

இனியன்: அடேயப்பா. சரி பட்டாம்பூச்சிகள் எங்கு வாழும்?

மகிழன்: பட்டாம்பூச்சிகள் உலகின் பெரும்பாலான இடங்களில் வாழ்கின்றன. காடுகள் மற்றும் குளிர்ச்சி பொருந்திய உயரமான மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றன. கடும் வெப்பம் நிறைந்த பாலைவனப் பகுதிகளிலும் வாழும்.



இனியன்: மணம் பரப்பும் வேதிப் பொருள் பட்டாம்பூச்சியிடம் இருக்கிறதாமே உண்மையா?

மகிழன்: மணம் பரப்பும் வேதிப் பொருள் அதன் இறக்கைகளில் உள்ளது. அது வெகுதொலைவில் இருந்தாலும் தன்னுடைய இணையை ஈர்க்க வல்லது.

மகிழன்: ஆண், பெண் பட்டாம்பூச்சிகள் புணர்ந்த பின் ஆண் பட்டாம்பூச்சி இறந்து விடும்.

இனியன்: பிறகு என்னாகும்?

மகிழன்: பெண் பட்டாம்பூச்சி புணர்ந்த சில மணி நேரத்தில் பெண் பூச்சியால் முட்டையிட இயலும். பின்பு பெண் பட்டாம்பூச்சி முட்டையிடத் தகுந்த இடத்தைத் தேடிச் சென்று முட்டையிடும்.

இனியன்: எங்கு முட்டையிடும்?

மகிழன்: முட்டையிலிருந்து வரும் புழுவுக்கு உணவாக அமையக் கூடிய இலைகளில் முட்டை இடுகின்றது.

இனியன்: முட்டை எந்த நிறத்தில் இருக்கும்?

மகிழன்: மஞ்சள், இளம்பச்சை நிறத்தில் சிறு உருண்டை நீளுருண்டை வடிவில் இருக்கும்.

இனியன்: முட்டையிலிருந்து வெளிவரும் புழு என்ன சாப்பிடும்?

மகிழன்: இலைகளையும் அங்கு உள்ள முட்டைகளையும் உணவாக உட்கொள்ளும்.

இனியன்: சாப்பிட்டுக் கொண்டே இருக்குமா?

மகிழன்: ஆமா, ஒரு நாளிலேயே தன் உடல் எடையை விட அதிகமான உணவை உட்கொள்ளும்.


இனியன்: ம்... பிறகு.

மகிழன்: முழு வளர்ச்சி அடைந்த புழு தன்னைச் சுற்றி நூலிழை போன்ற கூடு கட்டி கூட்டுப்புழு நிலையில் அசையாமல் சில நாட்கள் அதற்குள்ளேயே இருக்கும்.

இனியன்: அப்போ செத்துருமா?

மகிழன்: இல்ல.

இனியன்: பட்டாம்பூச்சிக்கு என்னென்ன உறுப்புகள் இருக்கும்?



மகிழன்: ஆறு நீளமான கால்கள், ஓர் உறிஞ்சு குழாய் மற்றும் நீண்ட இரண்டு உணர்விழை, 4 இறக்கைகள், தலை, மார்பு, வயிறு எல்லாமே இருக்கும்.

இனியன்: எப்போ பட்டாம்பூச்சி வெளியே வரும்?

மகிழன்: கூட்டுக்குள் முழு வளர்ச்சி அடைந்த பின் பட்டாம்பூச்சி கூட்டை உடைத்து காலால் உந்தி வெளியே வந்து விடும்.

இனியன்: உடனே பறக்குமா?

மகிழன்: இல்ல, வெளியே வந்தவுடன் அதன்னுடைய இறக்கைகள் சற்று ஈரமாக இருக்கும். அவைகள் காய்ந்ததும் உடற்தசையை இறுக்கிக் காற்றையும் இரத்தத்தையும் அழுத்தி உடல் முழுவதும் பரப்பிப் பின் பறக்கின்றது.

இனியன்: ம். நீ சொன்னதைக் கேட்கும் போது நானும் பட்டாம்பூச்சி மாதிரி பறப்பது போல இருக்கு.
(இருவரும் வீட்டிற்குப் புறப்படுகின்றனர்).


**சு. சண்முகப்பிரியா,**
**முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு.**



# வெள்ளரிக்காய்



| | |
|---|---|
| கமலா: | அண்ணா எனக்கொரு உதவி செய்வாயா?<br>(எழுதுவதை நிறுத்தி விட்டு என்ன என்று கேட்பது போல் பார்த்தான் அரவிந்தன்) |
| கமலா: | இந்தக் கோடை காலத்திலிருந்து என்னைக் காத்துக் கொள்ள எனக்கொரு வழி சொல்லேன். |
| அரவிந்தன்: | கோடை காலத்தில் அதிக வெப்பமாக இருக்கிறதா? |
| கமலா: | ஆமாம். |
| அரவிந்தன்: | வெள்ளரி சாப்பிடு, வெப்பத்தைத் தணிக்கும். |
| கமலா: | எதனால் வெள்ளரி வெப்பத்தைத் தணிக்கிறது? |
| அரவிந்தன்: | அதில் 90 சதவீதம் நீர்ச் சத்து உள்ளது. |
| கமலா: | நீர்ச் சத்து இருந்தால் என்ன பயன்? |
| அரவிந்தன்: | நாவறட்சியைப் போக்கும், உடலுக்குக் குளிர்ச்சியை உண்டு பண்ணும். |
| கமலா: | அப்படியா, வெள்ளரி பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லேன். |
| அரவிந்தன்: | வெள்ளரி படரும் கொடி வகையைச் சேர்ந்தது. |





கமலா: அதுதான் தெரியுமே, வேறு ஏதாவது சொல்.


அரவிந்தன்: இதன் தாயகம் இந்தியா, இங்கிருந்து உலக நாடுகளுக்கெல்லாம் படர்ந்திருக்கிறது.

கமலா: நம் நாடு தான் இதன் தாயகமா ! பெருமையாக இருக்கிறது அண்ணா.


அரவிந்தன்: வெள்ளரியில் மூன்று வகை உண்டு.


கமலா: அவை என்னென்ன?

அரவிந்தன்: சொல்கிறேன் கேள், ஒன்று மெல்லிய நீண்ட வகை, இரண்டு குட்டையான பருத்த வகை, மூன்று பழத்திற்கானது.









கமலா: வேறு சுவையானது இருந்தால் சொல்.

அரவிந்தன்: வெள்ளரிப் பிஞ்சைத் தோலோடு சாப்பிட்டால் அதிக பலன் கிடைக்கும். வெள்ளரி விதையில் அதிக மருத்துவ குணம் இருக்கிறது.

கமலா: என்ன என்று சொல் அண்ணா.

அரவிந்தன்: நீரடைப்பு மற்றும் கல்லடைப்புக்குச் செய்யப்படும் மருந்துகளில் வெள்ளரி விதை சேர்க்கப்படுகின்றது.



கமலா: இச்செய்தி வியப்பாக இருக்கிறது அண்ணா.

அரவிந்தன்: வயிற்று எரிச்சல், நெஞ்செரிச்சல், உயர் இரத்த அழுத்தம், தூக்கமின்மை ஆகியவற்றையும் நீக்குகின்றது.

கமலா: அதில் என்ன சத்துக்கள் இருக்கின்றன?

அரவிந்தன்: வெள்ளரியில் வைட்டமின் பி,சி,கே மற்றும் கால்சியம், பொட்டாசியம், தாதுக்கள் நிறைந்துள்ளன.

கமலா: இத்தனை சத்துக்களும் இவ்வளவு சிறிய வெள்ளரியிலா?

அரவிந்தன்: வெள்ளரிக்காய் அழகைக் கூட மெருகூட்டும். உன் உடல் எடையைக் கூடக் குறைக்கும்.

கமலா: அழகை மெருகூட்டுமா எப்படி?

அரவிந்தன்: அதனை வெட்டிக் கண்களிலும் முகத்திலும் வைத்தால் கருவளையத்தையும், முகத்திலுள்ள கரும்புள்ளிகளையும் போக்கும்.

கமலா: அண்ணா! இன்றே வெள்ளரிக்காய் வாங்கிச் சாப்பிடலாமா? (இருவரும் செல்கின்றனர்).

**கு. புவனேஸ்வரி,**
**முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு.**


நன்றி